முற்பகல் 11–55

7. மேட்டூர் அணையிலிருந்து ஆடிப்பெருக்கை முன்னிட்டு தண்ணீர் திறந்து விடுவது பற்றிய முதலமைச்சரின் அறிவிப்பு

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடிப் பெருக்கு விழாவை முன்னிட்டு மேட்டூரிலிருந்து 7 நாட்களுக்கு, ஒரு நாளுக்கு 1 டி.எம்.சி. அடி வீதம் தண்ணீர் திறந்துவிட உத்தரவிடப்பட்டுள்ளது. ஆக, 7 நாட்களுக்கு மொத்தம் 7 டி.எம்.சி. அடி தண்ணீர் திறந்துவிடப்படும். மேலும், மேட்டூருக்கு நீர்வரத்தைப் பொறுத்து விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுவதைப் பற்றிப் பின்னர் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இதற்கிடையில் விவசாயிகள் எந்தச் சாகுபடியும் இல்லாமல், எந்த இலாபமும் அடையாமல் இருந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் ஒரு விசேஷ திட்டத்தை இந்த அரசு அறிவித்திருக்கிறது. காட்டாமணக்கு–Jatropha, சர்க்கரைக் கிழங்கு–sugar beet, sweet sorghum – சர்க்கரைச் சோளம் ஆகிய பயிர்களைப் பயிரிட்டால் குறைந்த அளவு தண்ணீர் இருந்தாலே போதும். நெல் சாகுபடியைவிடப் பன்மடங்கு அதிக இலாபம் பெறலாம் என்பதை விவசாயிகளுக்கு ஏற்கெனவே விளக்கிக் கூறியிருக்கிறோம். இதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தையும் அறிவித்திருக்கிறோம். அதுதான் Contract Farming என்பதாகும். பெரிய தொழிலதிபர்களை நாங்கள் Expression of Interest கொடுக்கும்படி அழைத்திருக்கிறோம். பலர் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான காலக்கெடு கடந்த 23 ஆம் தேதியன்று முடிவடைந்தது. இப்போது வந்திருக்கின்ற அந்த விண்ணப்பங்களை ஆராய்ந்து இன்னும் சில நாட்களில் முடிவு எடுக்கப்படும். இதன்படி பெரிய தொழிலதிபர்கள் தங்கள் பொறுப்பில் 25,000 ஏக்கர், 30,000 ஏக்கர் என்று பெரிய நிலப்பரப்புகளை எடுத்துக்கொண்டு, அந்த நிலப்பரப்பில் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்று சிறிய அளவில் நிலம் வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு, அவர்கள் தேவையான உதவிகளைச் செய்து, அந்த விவசாயிகளோடு இந்தத் தொழிலதிபர்கள் ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, அவர்களுடைய நிலங்களில் அவர்களைக் காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு ஆகியவற்றைப் பயிரிடச் செய்து அதற்குத் தேவையான விதைகள், உரங்கள் மற்றும்

தேவையான உதவிகள் அனைத்தையும் இந்தத் தொழிலதிபர்களே சிறு விவசாயிகளுக்குக் கொடுத்து, அவர்கள் அந்தப் பயிர்களைச் சாகுபடி செய்த பின், இந்தப் பெரிய தொழிலதிபர்களே விலை கொடுத்து, நல்ல விலைக்கு, அந்தச் சிறு விவசாயிகளிடமிருந்து அவற்றை வாங்கிக் கொள்வார்கள். இந்தப் பயிர்களின் மூலம் இந்த விவசாயிகளும் இலாபம் அடைவார்கள். அவர்களுக்கு ஓர் உத்தரவாதம் இருக்கின்றது. இத்தனை நாளும் காட்டாமணக்குப் பயிரிடுங்கள், sweet sorghum பயிரிடுங்கள், சர்க்கரைச் சோளம் பயிரிடுங்கள் என்று அரசு அறிவுரை வழங்கினாலும், விவசாயிகள் கேட்ட கேள்வி; இந்தப் பயிர்களை எல்லாம் சாகுபடி செய்தால் எப்படி விற்பனையாகும், யார் வாங்குவார்கள் என்ற கேள்வியைக் கேட்டார்கள். இப்போது அதற்கும் ஒரு வழி செய்தாகிவிட்டது. பெரிய தொழிலதிபர்களே விவசாயிகளோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, அவர்கள் சாகுபடி செய்கின்ற பயிர்களை அவர்களிடமிருந்து விலை கொடுத்து வாங்கிக்கொள்வார்கள். இந்தத் தொழிலதிபர்கள் தொழிற்சாலைகளைத் தொடங்கி, இருக்கின்ற தொழிற்சாலைகளை விரிவுபடுத்தி, Ethanol, Bio-diesel, Bio-fuel தயாரிப்பார்கள். இது வெற்றிகரமாகச் செயல்படமுடியும்; செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. ஆகவே, விரைவிலேயே தமிழகத்தின் rural economy — கிராமப்புறப் பொருளாதாரம் மேம்பாடு அடையும்; ஒரு பெரிய உன்னத நிலையை அடையும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நண்பகல் 12-00

6. மானியக் கோரிக்கைகள், 2004-2005, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2004-2005 ஆம் ஆண்டிற்கான இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் பத்திரப் பதிவுத் துறை மற்றும் உள்ள துறைகளுக்கான மானியக்